DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C.3/2022 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| Name | : | **தினேஸ்வரன்** |
| Father's Name | : | சேங்கைச்சாமி |
| Village | : | கலியாந்துார் |
| Taluk | : | திருப்புவனம் |
| Calling | : | தனியார் நிதி நிறுவனம் |
| Religion | : | இந்து |
| Age | : | 32/2024 |

**(வழக்கின் எதிரி ஆஜர்.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 06.12.2024

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது கலியாந்துாரில் குடியிருந்து சென்னையில் தனியார் நிதி நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். பட்டியல் சாட்சி 2 சேங்கைச்சாமி எனது அப்பா ஆவார். பட்டியல் சாட்சிகள் திவாகர், மலைராஜன், அவினாஷ்குமார், அஜித் ஆகியோர்களை தெரியும். எதிரி மு.த்துக்குமாரினுடைய அம்மா ரோகிணி எனது அப்பா சேங்கைச்சாமிக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டுவிட்டதாக இருதரப்பினருக்கும் முன்விரோதம் ஏற்பட்டு அது ஊர் பெரியோர்கள் முன்னிலையில் பேசி தீர்த்துவைக்கப்பட்டது. அதன் பிறகு எதிரி முத்துக்குமார் எனது அப்பாவை பார்த்து போகும் வரும் இடங்களில் ஜாடை மாடையாக பேசிவதை வழக்கமாக வைத்திருந்துள்ளார். கடந்த 17.02.2021ம் தேதி

காலை சுமார் 7.15 மணியளவில் எதிரி முத்துக்குமார் என்பவர் எங்கள் ஊர் தென்கரை ஊருணிக்கரை படிக்கட்டு அருகே எனது அப்பா சேங்கைச்சாமி திவாகர் என்பவருடன் பேசிக்கொண்டிருந்த போது ஏற்கனவே இருந்த முன்விரோதத்தை மனதில் வைத்து எனது அப்பாவை உச்சந்தலை, வலது புஜம், வலது கை மணிக்கட்டு, வலது முகத்தாடை ஆகிய இடங்களில் வெட்டி ரத்தகாயங்களை ஏற்படுத்திவிட்டார். வெட்டும் போது இதோடு செத்து தொலைடா என்று சொல்லி எனது அப்பாவை தேவடியா மகனே என்று சொல்லி வெட்டியுள்ளார். இந்த தகவலை திவாகர் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். இந்த சம்பவம் நடக்கும் போது உடனிருந்த திவாகர் பார்த்துள்ளார். மேலும் சம்பவத்திற்கு அருகில் உள்ள பெட்டிக்கடையில் இருந்து மலைராஜன், அவினாஷ்குமார், அஜித் ஆகியோர்கள் பார்த்துள்ளார்கள். எனது அப்பாவின் அலறல் சத்தம் கேட்டு மேற்படி நபர்கள் எனது அப்பாவை தூக்கி அந்த வழியாக வந்த போக்கு ஆட்டோவில் ஏற்றி அனுப்பிவைத்துள்ளார்கள். திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளார்கள் நான் இத்தகவலை கேள்விப்பட்டு திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது நான் மேலே சொன்ன காயங்கள் எனது அப்பாவின் உடம்பில் பார்த்தேன். எனது அப்பா மயக்க நிலையில் இருந்தார். நான் எனது அப்பாவிடம் மேற்கண்டசம்பவம் தொடர்பாக விசாரித்தபோது அவர் எதிரி முத்துக்குமார் அவரை வெட்டியதாகவும் மேலும் நான் மேலே சொன்ன சங்கதிகளை எனது அப்பாதான் என்னிடம் சொன்னார். மேலும் திவாகரும் மருத்துவமனையில் வைத்து நடந்த சம்பவத்தை என்னிடம் சொன்னார். பின்னர் மேல் சிகிச்சைக்கு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு அவர் சுமார் 45 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில்

இருந்தார். எனது அப்பா மதுரை ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த ஏழுமலை காவல் ஆய்வாளரிடம் நடவடிக்கை வேண்டி புகார் கொடுத்தேன். எனது அப்பா அந்த நேரத்தில் புகார் கொடுக்கும் நிலையில் இல்லை. ஆகவே இச்சம்பத்தை கேள்வியுற்ற தெரிந்த வகையில் நான் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் அறிவேன் சாட்சியாக பிச்சை மகன் அஜித் கையொப்பம் செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் நான் கொடுத்தது ஆகும். அந்த புகார் மனு **அ.த.சா.ஆ.1** ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

மதுரை ராஜாஜி மருத்துவமனையில் நான் கொடுத்த புகாரை நான் தான் எழுதினேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை கேள்விப்பட்ட சங்கதிகளை வைத்து புகார் எழுதிக்கொடுத்தேன். சா்ட்சி திவாகர் எனக்கு சகோதரர் முறை. சாட்சி மலைராஜ் எனது அப்பாவிற்க்கு தம்பி முறை ஆவார். மற்ற சாட்சிகளில் அவினாஷ்குமார், ஆதிநாராயணன், அஜித் ஆகியோர் நெருங்கிய உறவினர் என்றால் அஜித் நெருங்கிய உறவினர் இல்லை. ஏற்கனவே முன் விரோதம் ஏற்பட்டு பஞ்சாயத்து நடந்ததாக கூறியுள்ளேன், அந்த பஞ்சாயத்து யார் யார் முன்னிலையில் நடைபெற்றது என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியாது. எனது அப்பாவை அடிக்கடி தகராறு செய்ததாக கூறுவது சம்மந்தமாக காவல் துறையில் புகார் கொடுத்துள்ளேன். ஏற்கனவே புகார் கொடுத்ததை நான் போலிசார் விசாரணையிலோ, முதல் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரிதான். திருப்புவனம் அரசு மருத்துவமனையில் எனது அப்பா சிகிச்சையில் இருந்த போது

போலிசார் யாரும் வரவில்லை. காவல்நிலையம் வழியாக நாங்கள் மருத்துவமனைக்கு சென்றிருப்போம் என்றால் இல்லை என் சித்தப்பா புகார் கொடுத்தார். சம்பவ இடத்தில் டீக்கடை மற்றும் வேறு கடைகளில் கூட்டமாக இருந்திருப்பார்கள் என்றால் ஆமாம். மதுரை ராஜாஜி மருத்துவமனையில் புகாரை நான் ஆய்வாளரிடம் தான் கொடுத்தேன் என்றால் சரிதான் சாட்சி அதற்கு பின்பு அவர் ஆய்வாளரா என்று தெரியாது என்று கூறுகிறார். எதிரி என் அப்பாவிற்கு காயத்தை ஏற்படுத்தவில்லை என்றும் முன் விரோதம் காரணமாக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை மதுரை ராஜாஜி மருத்துவமனையில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால் ஆய்வாளர் தான் எழுதினார். நான் சொல்வதுபோல் போலிசார் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும் எதிரிக்கு எதிராக புகார் கொடுக்கவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2024.12.06 17:31:27 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.